කාන්තා, ළමා කටයුතු හා සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு
Ministry of Women, Child Affairs and Social Empowerment

මගේ අංකය. / எனது இல. / My No: MWCA/06/10/1-11
ඔබේ අංකය. / உமது இல. / Your No.:
දිනය. / திகதி. / Date: 2023-12-27

**மகளிர் சிறுவர் அலுவல்கள் சுற்றறிக்கை : 3/2023**

சகல மாவட்ட செயலாளர்களுக்கும்,

**கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.45000.00 போசாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2024**

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தனைக அமைச்சின் இலக்கம் MWCA/CP/02/01/23/11 இன்கீழ், ''கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 10 மாதங்களுக்காக ரூ.45,000.00 போசாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் உள்ள சிக்கல்களைக் குறைக்கும் வகையில் மிகவும் வினைத்திறன்மிக்கதாக அமுல்படுத்துதல்'' என்னும் தலைப்பில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

02. அதன் பிரகாரம் மேற்படி நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நான் உங்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைத்த 06/2016 மற்றும் 07/2022 இன் சுற்றறிக்கைகளை 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் ரத்துச் செய்கின்றேன். அன்றைய தினம் தொடக்கம் (2024.01.01) இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

**03. அமுலாகும் திகதி**

3.1 இந்தப் புதிய சுற்றறிக்கை 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும்.

3.2 நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2023.12.31 வரை சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவங்களுக்காக 07/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும். (பயனாளிகளைத் தெரிவுசெய்யும் குறிகாட்டிகள் 07/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் அமைதல் வேண்டும்)

| | කාන්තා, ළමා කටයුතු | සමාජ සවිබලගැන්වීම |
|---|---|---|
| ලේකම්/செயலாளர் Secretary:- කාර්යාලය/ அலுவலகம் /office | 011-2186057 | 011-2883525 |
| | 011-2186055 | 011-2887349-51 |
| ෆැක්ස්/ பெக்ஸ் Fax: | 011-2187249 | 011- 2187007 |
| ඊමේල්/மின் தபால்/Email: | secretary@childwomenmin.gov.lk | msesecretary@sltnet.lk |
| වෙබ් අඩවිය/புசன்/Website: | www.childwomenmin.gov.lk | www.stateminsamurdhi.gov.lk |
| | 05 වන මහල, II අදියර ,සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. 05 ஆம் மாடி, கட்டம் II, செத்சிறிபாய, பத்த்ரமுல்லை. பத்த்ரமுல்லை. 05th Floor, Stage II, Sethsiripaya,Battaramulla | 01 වන මහල, II අදියර ,සෙත්සිරිපාය, බත්තරමුල්ල 01 ஆம் மாடி, கட்டம் II, செத்சிறிபாய, 01st Floor, Stage II, Sethsiripaya,Battaramulla |

**04. பொறுப்புக்கள் மற்றும் கண்காணித்தல்**

4.1 மாவட்டத்தினுள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான பொறுப்புகள் மற்றும் கண்காணித்தல் மாவட்ட செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்படுவதுடன் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் அமுல்படுத்தப்படுவதற்கான பிரதானமான பொறுப்புக்கள் மற்றும் கண்காணித்தல் பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்றது.

**05. அமுல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்**

5.1 மாவட்ட மட்டத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் அமைச்சுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் மாவட்ட செயலாளரின் கண்காணிப்பின்கீழ் மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5.2 பிரதேச செயலாளரின் கண்காணிப்பின்கீழ் இந்த நிகழ்ச்சித்திட்டம் களநிலையில் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் அமுல்படுத்துதல் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்படுகின்றது.

5.3 முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் இல்லாதவிடத்து சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் அல்லது மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது வேறு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர்க்கு 5.1/5.2 இன் பொறுப்புக்களை மாவட்ட செயலாளர் / பிரதேச செயலாளர்க்கு வழங்க முடியும்.

5.4 இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக விடயப் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொடுத்தல் பொருத்தமாக அமையும் என்பதால் அதற்குப் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு பிரதேச செயலாளர்கள் அவதானத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**6. பயனாளிகளைத் தெரிவுசெய்தல்**

6.1 தற்போதைய தனிநபர் நடுத்தர அளவு மாதாந்த செலவை குடும்பத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையால் பெருக்கி குடும்பத்தின் மாதாந்த மொத்த செலவினைத் தீர்மானித்து அதற்குக் குறைவான மாதாந்த வருமானத்தையுடைய குடும்பங்களின் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இந்த நன்மை உரித்தாகும்.

6.1.1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகளுக்கேற்ப தற்போதைய தனிநபர் நடுத்தர மாத செலவு ரூ.38,121/- ஆகும். எதிர்காலத்தில் அந்தத் தொகையில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது சம்பந்தமாக முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் மூலம் அறிவிக்கப்படும்.

(உதா: குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை 03 எனின், அந்தக் குடும்பத்தின் மாதாந்த செலவு = ரூ.38,121/- x 03 =ரூ.114,363/-)

6.1.2 ஏனைய சமூக நலன்புரிக்கான பயன்களை வழங்குகின்றபோது குடும்பம் என்பதை வரைவிலக்கணப்படுத்தியுள்ளபடி, இந்த செயல்பாட்டிலும் அதே நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6.2 மேற்படி குறிகாட்டிகளின் பிரகாரம் தகுதி பெறாதபோதிலும் விண்ணப்பித்த தாய்மார்களின் கீழ்வரும்படி ஒவ்வொரு ஆரோக்கிய நிலைமைகள் அல்லது அவற்றுக்கு உரியதாக சுகாதார வைத்திய அதிகாரியின் சான்றுப்படுத்தல்களின் பேரில் கொடுப்பனவு உரித்தாகும்.)

- உடற்திணிவு சுட்டி (BMI பெறுமானம்) 18.5Kg/m2 இற்குக் குறைவாக இருத்தல்
- குருதிச் சோகை உள்ள
- பன்முகத்தன்மையுடையதாக இருத்தல் (இரட்டைக் குழந்தைகள் கர்ப்பம் தரித்தல்) அல்லது
- ஏனைய போசாக்கு குறைபாடுகள்

**7. விண்ணப்பப் படிவம்**

7.1 பெண் ஒருவர் தான் கர்ப்பிணி ஒருவராக பிணியாய்வு நிலையத்தில் பதிவுசெய்கின்ற சந்தர்ப்பத்தில் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரினால் இந்த நன்மையைப் பெறுவதற்காக விண்ணப்பத்தை விநியோகித்தல் வேண்டும், அது சம்பந்தமாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரின் மூலம் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுதல் பொருத்தமாகும்.

7.2 இந்த விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலகத்தினால் அச்சிடப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். அந்த விண்ணப்பப் படிவத்தின் மாதிரிப் படிவம் பின்னிணைப்பு 01 மூலம் காட்டப்பட்டுள்ளது. பயனாளி தாய்க்கு உரிய அறிவுறுத்தல்கள் விண்ணப்பப் படிவத்தின் பின்பக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தேவையான சந்தர்ப்பங்களின்போது பிரதேச செயலாளரினால் நேரடியாகவும் பயனாளிகளுக்கு விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம்.

7.3 வருமான நிலைமைகளை உறுதிசெய்தல் கர்ப்பிணித் தாய் நிரந்தரமாக வதியும் கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதனை கிராம அலுவலரினால் பதிவினை உறுதிசெய்து கர்ப்பிணித் தாய்மார்கள் பற்றிய தகவல் படிவத்தை பேணிவரல் வேண்டும்.

7.4 உறுதிச்சீட்டுக்களை விநியோகிக்கின்றபோது பிரதேச செயலகம் என்று குறிப்பிடப்படவேண்டியது கர்ப்பிணித் தாய் நிரந்தரமாக வதியும் பிரதேச செயலாளர் பிரிவு இல்லாமல் கர்ப்பிணித் தாய் பதிவு செய்துள்ள அரச மகப்பேற்று பிணியாய்வு நிலையம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவாகும். நிரந்தர வதிவிட பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் உறுதிச்சீட்டுகளை விநியோகிக்கின்ற இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகள் வருகின்ற சந்தர்ப்பங்களின்போது நிரந்தரமாக வதியும் கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர் மூலம் வருமானத்தை உறுதிப்படுத்துகின்ற கடிதமொன்றை பிரதேச செயலாளரின் கையொப்ப பிரதியுடன் உறுதிச்சீட்டுக்களை விநியோகிக்கின்ற பிரதேச செயலாளர் பிரிவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**8. உறுதிச்சீட்டுக்களை விநியோகித்தல்**

8.1 தாய்மார்களுக்கு பிரதேச செயலகத்தினால் உறுதிச்சீட்டுகளை விநியோகித்தல் வேண்டும்.

8.2 ஒரு உறுதிச்சீட்டின் பெறுமதி ரூ.4500.00 ஆகும். கர்ப்பகாலத்தில் இறுதி 06 மாதங்களுக்காக மற்றும் பாலூட்டும் சமயத்தில் முதல் 04 மாதங்களில் உள்வருகின்றவாறு அதாவது கர்ப்பகாலத்தில் 12 வாரங்கள் முழுமைபெறுகின்ற நாள் தொடக்கம் 10 மாதங்களுக்குத் தேவையான போசாக்கு உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 10 உறுதிச்சீட்டுக்களை ஒரே தடவையில் விநியோகித்தல் வேண்டும்.

8.3 பயனாளி தாய்க்கு விநியோகிக்கும் 10 உறுதிச்சீட்டுகளையும் 10 மாதங்களுக்காக செல்லுபடியாக்கி உறுதிச்சீட்டில் இலட்சினை பொறிக்கப்பட்டு செல்லுபடியாக்கி வழங்குதல் வேண்டும்.

8.4 உறுதிச்சீட்டுகளில் பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலாளரினால் அதிகாரமளிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவரினால் கையொப்பமிடுதல் வேண்டும்.

8.5 கர்ப்பகாலத்தில் உரிய காலத்தில் உரிய போசாக்கினைப் பெற்றுக்கொடுத்தல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும் என்பதால் கர்ப்ப காலத்தில் 03 மாதங்கள் நிறைவுபெறுவதற்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தை பிரதேச செயலகத்திற்கு ஒப்படைப்பதற்காக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறிவித்தல் முக்கியமாகும்.

**9. வியாபார நிலையங்களைப் பதிவுசெய்தல்.**

9.1 உறுதிச்சீட்டுக்களின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றபோது உணவுப் பொருட்களை வழங்குவதற்காக பிரதேச செயலாளர் பிரிவில் புவியியல் ரீதியாக வியாபித்துள்ள மற்றும் பயனாளிகள் இலகுவாக அடைய முடியுமான இடங்கள் சிலவற்றை இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் இணைவதற்கு விரும்புகின்ற, உணவுப் பொருட்களை வழங்கும் வியாபார நிலையங்கள் மூலம் விண்ணப்பங்களைப் பெற்று பிரதேச செயலாளரினால் கீழ்வரும் 9.2 குறிகாட்டிகளை அடிப்படையாகக்கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பொருத்தமான வியாபார நிலையங்களைப் பதிவுசெய்தல் வேண்டும்.

9.2 இந்த விநியோகஸ்தர்கள், வியாபார நிலையங்களைத் தெரிவுசெய்கின்றபோது பின்வரும் குறிகாட்டிகளின்மீது அவதானம் செலுத்துதல் வேண்டும்.

i. ஆகக் குறைந்தது ஒரு வருடமாவது வியாபார நிலையத்தை ஆரம்பித்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்ட விற்பனை நிலையங்களாக இருத்தல் வேண்டும்.
ii. பயனாளிகளுக்கு இலகுவாக அடையக்கூடிய இடமொன்றில் அமைந்திருத்தல் வேண்டும்.
iii. ஒருசில பயனாளிகள் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வருகைதருகின்றபோது அங்கு தரித்திருப்பதற்கு இடவசதி இருத்தல் வேண்டும்.
iv. ஒருசிலர்க்கு ஒரே சந்தர்ப்பத்தில் பொருட்களை வழங்குவதற்கு உள்ள இயலுமை.
v. போதுமான அளவில் கையிருப்பில் பொருட்களை வைத்து பேணிவரும் ஆற்றல்.
vi. உணவுப் பொருட்களின் பண்புத் தரம்.

9.3 அவ்வாறு பதிவு செய்கின்ற வியாபார நிலையங்கள் சம்பந்தமாக பிரதேச செயலாளரினால் பயனாளிகளை விழிப்பூட்டுதல் வேண்டும், அத்துடன் அவ்வாறு பதிவு செய்கின்ற வியாபார

நிலையங்களுக்கு மாத்திரம் இந்த உறுதிச்சீட்டுகளுக்காக அத்தாட்சிப்படுத்திய உணவுப் பொருட்களை விநியோகிக்கும் அதிகாரம் கிடைக்கும். அத்தாட்சிப்படுத்தப்பட்ட பொருட்களைத் தவிர்ந்த ஏனைய பொருட்களை விநியோகிப்பதில்லை என்பதைத் தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்குப் பதிலாக ஏனைய பொருட்களை வழங்கும் அல்லது பணம் வழங்கும் அல்லது ஏனைய முறைகேடுகள் இடம்பெறுவது சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அதன் உண்மைத்தன்மை உறுதிசெய்யப்படின் பிரதேச செயலாளர்க்கு பதிவினை ரத்துச் செய்ய முடியும்.

**10. உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்**

10.1 பிரதேச செயலகங்களிலிருந்து விநியோகிக்கப்படுகின்ற உறுதிச்சீட்டுகளில் உரிய மாதத்தின் உறுதிச்சீட்டுகளுக்காக தெரிவுசெய்கின்ற விற்பனை நிலையங்களிலிருந்து தனக்கு வசதியான விற்பனை நிலையத்தில் அதிகூடிய தொகையான ரூ.4500/- இற்கு உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்று பயனாளி தாய்மார்களுக்கு அறிவித்தல் வேண்டும். அதற்காக உறுதிச்சீட்டுக்களை வழங்குகின்றபோது பதிவு செய்த விற்பனை நிலையங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள், விலைகொடுத்து வாங்கவேண்டிய உணவுப் பொருட்கள், உறுதிச்சீட்டு தொலைந்தால் மீண்டும் வழங்கப்படுவதில்லை என்னும் அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய சிறிய துண்டுப் பிரசுரத்தை தயாரித்து உறுதிச்சீட்டுகளின் தொகுதியுடன் கர்ப்பிணித் தாய்மார்க்கு வழங்குதல் வேண்டும்.

10.2 பயனாளி தாய்மார்க்கு அல்லது முகவர் ஒருவர்க்கு இந்த உறுதிச்சீட்டுக்கு உரிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டு.

10.3 உரிய மாதத்திற்கு பெறுமதியான உறுதிச்சீட்டுக்கு அந்த மாதத்தில் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு மாத்திரமே வாய்ப்பு உண்டு என்பதால், அந்த உறுதிச்சீட்டில் முத்திரையிட்டு மாதத்தின் முடிவில் அந்த உறுதிச்சீட்டுகளுக்காக உணவுப் பொருட்கள் விநியோகிக்கக் கூடாது என்று விற்பனை நிலையங்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

10.4 உரிய மாத்தில் உணவுப் பொருட்களை விநியோகிக்கின்ற நிறுவனங்களில் பொருட்களின் தரம், அளவு மற்றும் விலை சம்பந்தமாக திருப்தியடையாதவிடத்து பயனாளி தாய்க்கு வசதியான பிறிதொரு பதிவுசெய்த விற்பனை நிலையத்திடமிருந்து எதிர்வரும் மாதங்களின் தவணைகளுக்குரிய உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**11. பெற்றுக்கொள்ள முடியுமான உணவுப் பொருட்கள்**

11.1 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய் ஒருவரின் போசாக்குத் தேவையை அடைந்துகொள்வதற்கு இயலுமான வகையில் உணவுப் பொருட்கள் சிலவற்றை வகைப்படுத்தி சுகாதார அமைச்சினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அந்த உணவுப் பொருட்களின் தொகுதி மற்றும் அவற்றின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் பின்னிணைப்பு 02 மூலம் காட்டப்பட்டுள்ளது. அந்த உணவுப் பொருட்களின் தொகுதியில் ஒருசிலவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உணவுப் பொருட்களை விலைகொடுத்து வாங்குதல் வேண்டும் என்று பயனாளி தாய்மார்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

**12. பதிவுசெய்த விற்பனை நிறுவனங்கள்**

12.1 மேற்படி 9.1 மற்றும் 9.2 இன் பிரகாரம் பிரதேச செயலகத்தினால் தெரிவுசெய்கின்ற விற்பனை நிலையங்களைப் பதிவு செய்த பிற்பாடு கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் சம்பந்தமாக பிரதேச செயலாளரினால் விற்பனை நிலையத்திற்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

12.2 கர்ப்பிணித் தாய்மார்கள் உறுதிச்சீட்டுகளுக்காக உணவுப் பொருட்களை விலைகொடுத்து வாங்க வருகின்றபோது அவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும் என்று அறிவித்தல் வேண்டும்.

12.3 சுகாதார அமைச்சினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை போதுமான அளவில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

12.4 அந்த அத்தாட்சிப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை மாத்திரம் உறுதிச்சீட்டுகளுக்காக வேண்டி விநியோகித்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெறுவதில்லை என்று உறுதிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பொருத்தமான நிறுவனமொன்றை இனங்கண்டு இந்த உறுதிச்சீட்டு வழங்கும் செயன்முறையிலிருந்து நீக்குவதற்கு நேரிடும் என்று அறிவித்தல் வேண்டும்.

12.5 உரிய மாதத்திற்கு பெறுமதியாக்கப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்காக உரிய மாதத்தில் மாத்திரம் பொருட்களை விநியோகித்தல் மற்றும் அந்த மாதம் முடிந்த பிற்பாடு அந்த உறுதிச்சீட்டுகளுக்காக பொருட்களை விநியோகிக்கக் கூடாது.

12.6 அந்த மாத்தில் சேர்கின்ற உறுதிச்சீட்டுகள் அதே மாதத்தின் முடிவில் கொடுப்பனவுகளுக்காக பிரதேச செயலகத்திற்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**13. கொடுப்பனவு செய்தல்**

13.1 விற்பனை நிலையங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற உறுதிச்சீட்டுகளுக்கான கொடுப்பனவுகளை பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அங்கு உறுதிச்சீட்டுகளின் உண்மைத்தன்மை பற்றி திருப்திகொள்ளல் வேண்டும்.

13.2 விற்பனை நிலையத்தினால் உறுதிச்சீட்டுகளைக் கொண்டுவந்து ஒப்படைக்கின்றபோது ரசீதுப் புத்தகத்தைப் பாவித்து ரசீதுப் பத்திரமொன்றை (மூலப் பிரதியை) விற்பனை நிலையத்திற்கு வழங்கி அதன் உப பிரதியை கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக பொது 35 வவுச்சருடன் இணைத்து கணக்குப் பிரிவுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**14. அறிக்கைகளைப் பேணிவரல்**

14.1 பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்களுக்காக கிராம அலுவலர் பிரிவிற்கேற்ப வெவ்வேறாக இனங்காணக்கூடியவாறு கோப்புகளைப் பேணிவரல் வேண்டும்.

14.2 பொறுப்பேற்கின்ற விண்ணப்பப் படிவங்களுக்காக பின்னிணைப்பு 03 இன் பிரகாரம் ஆவணமொன்றைப் பேணிவரல் வேண்டும்.

14.3 பயனாளி தாய்மார்களுக்கு உறுதிச்சீட்டுகளை விநியோகிக்கின்றபோது பின்னிணைப்பு 04 இன் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் ஆவணமொன்றைப் பேணிவரல் வேண்டும்.

**15. மாதாந்த முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்**

**15.1 மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து அறிவிப்பதற்காக பின்னிணைப்பு 05, பின்னிணைப்பு 06 மற்றும் பின்னிணைப்பு 07 இன்படி நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.**

**15.2 பின்னிணைப்பு 06 இற்கு உரிய தகவல்களை பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் பேணிவரல் வேண்டும்.**

**15.3 உரிய தகவல்களை பிரதேச செயலகங்களிடமிருந்து பெற்று பின்னிணைப்பு 06 இன் பிரகாரம் மாவட்ட சுருக்க அறிக்கையைத் தயாரித்து மாவட்ட செயலகங்களின் ஊடாக எல்லா மாதங்களிலும் 08 ஆம் திகதிக்கு முன்னர் மாதாந்த முன்னேற்ற அறிக்கையை தயாரிப்பதற்காக பிரதான அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.**

**15.4 பின்னிணைப்பு 07 இற்கு உரிய தகவல்களை மாவட்ட முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி இணைப்பாளர் மூலம் தயாரித்து மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்துடன் சகல காலாண்டுகளினதும் இறுதியில் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.**

**15.5 இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரிய தகவல் வலையமைப்பொன்றைப் பேணி வருவது அத்தியாவசியமாகும் என்பதால், இந்த சுற்றறிக்கையின் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் மற்றும் மாவட்ட மட்டத்தில் தகவல்களைப் பேணிவரல் கட்டாயமாகும்.**

**16. 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக இன்றுவரை தாங்கள் / அலுவலர் குழாம் வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், புதிய முறைமையின்கீழ் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்காக தாங்கள் மற்றும் தங்களுடைய அலுவலர் குழாம் வழங்கிவரும் ஒத்துழைப்புகளைப் பெரிதும் மெச்சுகின்றேன்.**

**17. இந்த சுற்றறிக்கைக்கு பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மற்றும் சுகாதார அமைச்சின் உடன்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.**

**ஒப்பம்: செயலாளர்**

**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு**

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி அலுவலகம்
2. செயலாளர், பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
3. செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
4. செயலாளர், சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
5. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
6. மாகாண பிரதம செயலாளர்கள்
7. மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்கள்
8. பிரதேச செயலாளர்கள்

(1–8) தயவுடன் அறிந்துகொள்வதற்காக மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக

9. நன்னடத்தை ஆணையாளர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
10. பணிப்பாளர், இலங்கை பெண்கள் பணியகம்
11. தலைவர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
12. கணக்காய்வு அதிபதி, கணக்காய்வு அதிபதி திணைக்களம்

**பின்னிணைப்பு – 01**

**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு**

**கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு போசாக்கு உணவு வழங்குவதற்காக ரூ.45000/- கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2024**

| | |
|---|---|
| 01. கர்ப்பிணித் தாயின் பெயர் : | |
| 02. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | 03. தொலைபேசி இலக்கம் : |
| 04. கர்ப்பிணித் தாயின் முகவரி : | 05. பிணியாய்வு நிலையத்தின் பெயர் : |
| 06. கிராம அலுவலர் பிரிவு : | 07. பிரதேச செயலாளர் பிரிவு : |
| 08. கர்ப்பிணித் தாயின் வயது : | 09. தாங்கள் கர்ப்பம் தரித்து எத்தனை வாரங்கள் கடந்துள்ளது? பிள்ளைப் பேறின் பின்னர் ஆயின் எத்தனை மாதங்கள் கடந்துள்ளன? |
| 10. இது எத்தனையாவது கர்ப்பம்? | 11. தற்போதிருக்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை: |
| 12. அங்கவீனமுடைய பிள்ளைகள் இருப்பின் எத்தனை பேர்? | |
| 13. கர்ப்பிணித் தாயின் தொழில் : | |
| 14. கணவரின் தொழில் : | |
| 15. பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தங்களுக்குப் பதிலாக பெயர் குறிப்பிடும் பிரதிநிதியின் பெயர் :<br>.................................................................<br>மேற்படி தகவல்கள் சரியானவையென்று சான்றுப்படுத்துகின்றேன்.<br>.................................................................<br>கர்ப்பிணித் தாயின் கையொப்பம்<br><br>திகதி - | **16. கிராம அலுவலரின் சான்றுப்படுத்தல் :**<br>மேற்படி பெயரையுடைய ............................................ அவர்கள் .................. கிராம அலுவலர் பிரிவில் நிரந்தரமாக / தற்காலிகமாக வதிபவர் என்பதை சான்றுப்படுத்துகின்றேன்.<br>அவரின் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை ......... ஆகும். அத்துடன் மாதாந்த வருமானம் ................. ஆகும்.<br>....................................<br>கிராம அலுவலரின் கையொப்பம்<br>திகதி - பதவி முத்திரை |
| **17. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரின் சான்றுப்படுத்தல்:**<br>இந்தப் பெண் கர்ப்பிணித் தாய் / பாலூட்டும் தாய் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவிலக்கம்)<br>.................................................................<br>பாலூட்டும் தாய் எனின் பிள்ளையின் பிறந்த திகதி :<br>.................................................................<br>.................................................................<br>குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரின் கையொப்பம்<br>திகதி - பதவி முத்திரை | 18. பிணியாய்வு நிலையப் பொறுப்பாய்ந்த வைத்தியரின் சான்றுப்படுத்தல் :<br>BMI பெறுமானம் 18.5 இற்குக் குறைய ☐<br>குருதிச் சோகை ☐<br>இரட்டைக் குழந்தைகள் கர்ப்பம் தரித்தல் ☐<br>இந்தத் தாயின் கர்ப்பத்திற்கு வாரங்கள் ☐<br>ஏனைய சுகாதார காரணிகள் -<br>.................................................................<br>....................................................<br>பிணியாய்வு நிலையப் பொறுப்பாய்ந்த வைத்தியரின் கையொப்பம்<br><br>திகதி - பதவி முத்திரை |

**பிரதேச செயலாளரின் அங்கீகாரம் :**

அங்கீகரிக்கின்றேன் / அங்கீகரிக்கவில்லை.

............................................

பிரதேச செயலாளரின் கையொப்பம்

திகதி –

**முக்கியம்: கர்ப்பிணி பதிவேட்டின் சான்றுப்படுத்திய நிழற் பிரதியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். உத்தியோகத்தர்கள் கையொப்பமிட்ட சகல இடங்களிலும் தங்களுடைய முத்திரையை இடுதல் வேண்டும்.**

**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு**

**கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.45000/- போசாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

**அறிவுறுத்தல் படிவம்**

- நீங்கள் செல்லும் பணியாய்வு நிலையத்திலிருந்து / பிரதேச செயலகத்திலிருந்து பெறுகின்ற விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி, நீங்கள் நிரந்தரமாக வதியும் பிரிவின் கிராம அலுவலரிடமிருந்து வதிவிடத்தை உறுதிப்படுத்தி, குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரின் சான்றுப்படுத்தல் மற்றும் தற்பொழுது செல்லும் மகப்பேற்று பிணியாய்வு நிலையத்தின் பொறுப்பு வகிக்கும் வைத்திய அதிகாரியின் சான்றுப்படுத்தலுடன், கர்ப்பம் தரித்து 03 மாதங்கள் கடக்கும் முன்னர் பிரதேச செயலகத்தின் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்ற உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கவும்.
- பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்தை நீங்கள் செல்லும் மகப்பேற்று பிணியாய்வு நிலையம் அமைந்துள்ள பிரதேச செயலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.
- உங்களுடைய விண்ணபபத்துடன் கர்ப்பிணித் தாயின் குறிப்புப் புத்தகத்தின் பிரதியொன்றை இணைக்கவும்.
- பிரதேச செயலகத்திலிருந்து உறுதிச் சீட்டுகளைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரிய பிரதேச செயலகத்தில் பதிவுசெய்த விற்பனை நிலையங்களின் மூலம் உரிய மாதத்தில் உறுதிச்சீட்டுக்கு உரித்துப்பெறும் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு உறுதிச்சீட்டின் பெறுமதி ரூ.4500.00 ஆகும். எனவே ஒரு நிறுவனத்திடமிருந்து ஒரே தடவையில் ரூ.4500.00 இற்குரிய அத்தாட்சிப்படுத்தப்பட்ட பொருட்களையே பெற்றுக்கொள்ளலாம்.
- உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்கின்றபோது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பொருட்களை மாத்திரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அந்த அத்தாட்சிப்படுத்தப்பட்ட பொருட்களில் ஆகக் குறைந்த 05 பொருட்களையாவது பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் உணவுப் பட்டியலின் ஒருசிலவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உணவு வகைகளைத் தெரிவுசெய்தல் வேண்டும்.
- அத்தாட்சிப்படுத்தப்பட்ட பொருட்களின் வகைகளை விட ஏனைய பொருட்கள் அல்லது பணம் பெற்றுக்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் உங்களுக்கு உரித்தான சகல உறுதிச்சீட்டுகளையும் ரத்துச் செய்ய நேரிடலாம்.
- நீங்கள் விசேடமானதொரு காலப்பகுதியைக் கடத்துவதால் எப்போதும் நச்சுப் பொருட்கள் இல்லாத, இயற்கையான போசாக்கு உணவுப் பொருட்களைப் பெற்று மற்றும் சிறந்த மனநிலையைப் பேணிவருவதன் மூலம் தேகாரோக்கியமுள்ள குழந்தையைப் பிரசவித்து, அதற்கான கௌரவம் உங்களுக்கு உரித்தாகும்.

**கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ரூ.45000/- போசாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2024**

**சுகாதார அமைச்சினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உணவுப் பட்டியல்**

**தானிய வகை**

- அரிசி
- உழுந்து மா

**பயறு வகைகள்**

- பருப்பு
- கௌபி
- பாசிப் பயறு
- கடலை
- சோயா உற்பத்திகள்

**விலங்குணவுகள்**

- இறைச்சி
- மீன்
- கருவாடு
- செமன் ரின் மீன்
- நெத்தலி
- முட்டை

**பாலுணவுகள்**

தயிர்

பசும் பால் திரவம்

**கொழுப்பு கலந்த உணவுகள்**

நிலக்கடலை

எள்ளு

தேங்காய்

உள்நாட்டு மரக்கறி பழ வகைகள்

பின்னிணைப்பு – 03

## விண்ணப்பப் படிவத்தைப் பொறுப்பேற்கும் ஆவணம்

| தொடர் இலக்கம் | தாயின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | ஒப்படைத்த திகதி | ஒப்படைத்த மைக்கான கையொப்பம் | பெற்றுக்கொண்ட மைக்கான கையொப்பம் | பிரதேச செயலாளரின் அங்கீகாரம் | ஏனைய |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

பின்னிணைப்பு – 04

## உறுதிச்சீட்டுகளை விநியோகிப்பதற்காக பேணிவரும் ஆவணம்

| தொடர் இலக்கம் | பதிவிலக்கம் மற்றும் திகதி | தாயின் பெயர் | கர்ப்பகாலம் /பாலூட்டும் தாய் எனின் குழந்தை பிறந்த திகதி | செல்லுபடியாகும் காலம் | செல்லுபடியாக்கிய உறுதிச்சீட்டுகளின் எண்ணிக்கை | பிணியாய்வு நிலையம் அமைந்துள்ள இடம் | கிராம அலுவலர் பிரிவு | உத்தியோகத்தரின் கையொப்பம் | கிடைத்தமைக்கான கையொப்பம் | ஏனைய |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.45000.00 போசாக்கு கொடுப்பனவு வழங்கும்
நிகழ்ச்சித்திட்டம் - பிரதேச மட்டத்தில் உத்தியோகத்தர்களினால் பேணிவரவேண்டிய தகவல் அறிக்கை (மென் பிரதியொன்றாக)

| தொடர் இலக்கம் | தாயின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | கிராம அலுவலர் பிரிவு | 2023 | | | | | | | | | 2024 | | | | | | | | | | | | 2025 | | | | | | | | | | | | தவணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | |
| 1 | அப்சரா அபேவிக்ரம | | நாகொட | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | - | - | - | - | | | | | | | | | | | | | | | | | | 10 |
| 2 | மல்காந்தி | | மாதொல | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | | | | | | | | | | | | | | | | | | 10 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 0 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 0 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 0 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 0 |
| மொத்தம் | | | | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 2 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | | | | | | | | | | | | | | | | | | 20 |

* உதாரணமாக தொடர் இலக்கம் 1 இனைக் கருத்திற்கொள்கின்றபோது குறிப்பிடப்பட்ட தாய் 2023 ஏப்ரல் மாத்தில் பதிவு செய்து 10 உறுதிச்சீட்டுகளையும் பெறுவதற்கு உரித்துப் பெறின் 2024 ஜனவரி வரைக்கும் ஆவணத்தில் 1 இனைக் குறிப்பிடுதல் வேண்டும்.

* உதாரணமாக தொடர் இலக்கம் 2 இனைக் கருத்திற்கொள்கின்றபோது குறிப்பிடப்பட்ட தாய் 2023 அக்டோபர் மாத்தில் பதிவு செய்து 10 உறுதிச்சீட்டுகளையும் பெறுவதற்கு உரித்துப் பெறின் 2024 ஜூலை வரைக்கும் ஆவணத்தில் 1 இனைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.45000.00 போசாக்கு கொடுப்பனவு வழங்கும்**
**நிகழ்ச்சித்திட்டம் - மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்களினால் பேணிவரவேண்டிய தகவல் அறிக்கை**

| தொடர் இலக்கம் | பிரதேச செயலாளர் பிரிவு | 2023 | | | | | | | | | 2024 | | | | | | | | | | | | தவணைகளின் எண்ணிக்கை | விடுவித்த நிதி ஒதுக்கீட்டின் எண்ணிக்கை (A) | ...... ஆம் திகதிக்கு செலவு (B) | IT MIS இல் உட்படுத்தி கொடுப்பனவு செய்யாத அளவு (C) | எஞ்சிய நிதி ஒதுக்கீட்டின அளவு A - (B+C) | நிதி தேவைப்பாடு | ஒட்டுமொத்த கட்டுநிதி தேவைப்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | | | | | | | |
| 1 | கலிகமுவ | | | | | | | | | | | | | | | | | | | | | | 0 | | | | | | |
| 2 | தெரணியகல | | | | | | | | | | | | | | | | | | | | | | 0 | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | | | | | | | 0 | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | | | | | | | | | | | 0 | | | | | | |
| 5 | | | | | | | | | | | | | | | | | | | | | | | 0 | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| එකතුව | | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | | | | | | 0 | | | | | | |

1. தயாரித்தவர் :

..............................................

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி
மாவட்ட இணைப்பாளர், மாவட்ட
செயலகம்

2. பரிட்சித்து சான்றுப்படுத்தியவர் :

..............................................

பிரதம கணக்காளர் / கணக்காளர் மாவட்ட
செயலகம்

3. அங்கீகரித்தவர் :

..............................................

மாவட்ட செயலாளர் / மேலதிக மாவட்ட
செயலாளர்

பின்னிணைப்பு 07

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.45000.00 போசாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - காலாண்டு முன்னேற்ற அறிக்கை

மாவட்ட :

காலாண்டு :

| தொடர் இலக்கம் | பிரதேச செயலாளர் பிரிவு | விடுவித்த நிதி ஒதுக்கீட்டின் எண்ணிக்கை (காகிதாதிகள் நிதியொதுக்கீடு உள்ளடங்கலாக) | முதலாவது / இரண்டாவது / மூன்றாவது / நான்காவது காலாண்டின் இறுதியில் உண்மைச் செலவு (ரூ.) | காலாண்டின் இறுதியில் நன்மை பெற்றுக்கொகடுத்த மொத்த தாய்மார்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| ஒட்டுமொத்தம் | | | | |

1. தயாரித்தவர் :

..............................................

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர், மாவட்ட செயலகம்

2. பரீட்சித்து சான்றுப்படுத்தியவர் :

..............................................

பிரதம கணக்காளர் / கணக்காளர் மாவட்ட செயலகம்

3. அங்கீகரித்தவர் :

..............................................

மாவட்ட செயலாளர் / மேலதிக மாவட்ட செயலாளர்